எண்: 112/ 2025 நாள்: 18.08.2025

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**
**எண்.3, தேர்வாணையச் சாலை , சென்னை – 600 003.**
**செய்தி வெளியீடு**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு – தொகுதி VA பணிகளில் அடங்கிய தலைமைச் செயலகத் துறையின் (சட்டம் மற்றும் நிதித் துறைகள் நீங்கலாக) உதவிப் பிரிவு அலுவலர் பதவிக்கான (பதவிக் குறியீடு 3235) தேர்வு முடிவுகள், தேர்வர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 27.06.2025 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

மேற்படி பதவிக்கான மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு 28.08.2025 அன்று தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை–600 003ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண்/இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தற்காலிக தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in–லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E–mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. தேர்வர்கள் மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச. கோபால சுந்தர ராஜ், இ .ஆ .ப.,
செயலாளர்